[1971 டிசம்பர் 15

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த நிலப் பட்டா வழங்கு விஷயத்தில். போர் முனையில் பணியில் இருக்கும் அல்லது ராணுவத்தில் உயிர் இழந்தோர் குடும்பங்களுக்கு, நிலம் இல்லாத அரிசனங்களுக்கு, நிலம் இல்லாத ஏழைமக்களுக்கு, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு, பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு, தங்ககட்டுப்பாடு சட்டத்தின் காரணமாக வேலையிழந்தோருக்கு, நிலப்பட்டா வழங்கப்படும் என்று அரசாங்கக் கொள்கை வழக்கத்தில் இருக்கிறது. இதில் நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு என்று வருகிற பட்டியலில் இந்த பின் தங்கிய வகுப்பினர்களுக்கு நிலப் பட்டா வழங்கி வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, பட்டா வழங்குவதில் ஏதேனும் கஷ்டம் இருந்தால், இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்படுகிற வீடுகளில் பிற்பட்டவகுப்பினர்களுக்கு ஏதாவது சலுகை காட்ட முடியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்படும் வீடுகளில் தனிப்பட்ட சலுகை பிற்பட்ட வகுப்பினருக்கு என்று காட்ட முடியாது. பணம் கொடுப்பவர்கள் அத்தனை பேருக்கும் வீடுகள் கட்டித்தரப்படுகிறது.

வந்தவாசியிலுள்ள கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.

* 434 வினா.—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரில் உள்ள கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் 1969-70-ம் ஆண்டு வரை எத்தனை வீடுகள் கட்ட கடன் வழங்கி இருக்கின்றது?

(இ) அதை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஒன்று.

(இ) அதிக எண்ணிக்கையில் கடன் மனுக்களைப் பெற்று சங்கத்தின் பணிகளை ஊக்குவிக்குமாறு திருவண்ணாமலை கூட்டுறவு துணைப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த வந்தவாசியில் உள்ள கூட்டுறவு வீடு கட்டித்தரும் சங்கம் சுமார் 30 ஆண்டுகாலமாகச் செயல்படாமல் இருக்கிறது. இந்த 30 ஆண்டுக் காலத்தில் 3 வீடுகள்தான் கட்டித்தரப்பட்டு இருப்பதால். உடனடியாக அரசு வேறு போர்டை நியமிக்க முடிவு எடுத்து ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

1971 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தற்போது அங்கே வந்துள்ள விண்ணப்பங்களின் மூலம் மொத்தம் ரூ. 28,00-க்கு கடன் மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, நிதி நிலைக்கேற்ப ஒப்புதல் அளிக்கப்படும்.

வட்டிக்கடைகள்.

*435 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மார்வாடி கடைகள், மற்றும் வட்டிக்கடைகளில் சட்ட பூர்வமான வட்டி விகிதங்களை பெரிய எழுத்துக்களில் விளம்பரப் பலகையில் எழுதி வைக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மாதிரிக் கடன் கொடுப்பவர்கள் 12 சதவிகிதத்திற்கு மேல் வாங்கக் கூடாது என்று இருந்தாலும், அதிகமாகவே வட்டி வாங்குகிறுர்கள். தாங்கள் கொடுக்கும் ஹுண்டியையும் எழுதாமல் இருக்கிறுர்கள். அதைத் தடுக்க, அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா? அம்மாதிரி சம்பவங்கள் வரும்போது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்தமாதிரி புகார்கள் வருகின்றன. ஆனால் சட்டப்படி அதை அனுகும்போது, நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை. வாங்கிறவர்களும், கொடுக்கிறவர்களும், வட்டி குறைவாக எழுதினாலும், அதிகமாகவே கொடுத்து விடுகிறுர்கள். சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வட்டிக்குத் தருகிறவர்கள், பல இடங்களில் கொடுப்பது ரூ. 500 ஆக இருந்தாலும், ரூ. 1000 என்று எழுதிக் கொள்கிறுர்கள். அதிகப்படியான வட்டியையும் முதலிலேயே எடுத்துக் கொள்கிறுர்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இதைத் தடுக்க வாங்குகிறவர்கள் தான் நிதானமாக நிறுத்தும் வகையில் நடக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, வாங்குகிறவர்களே தடுத்திருக்க வேண்டும் என்று சொல்கிறுர்கள். இந்த மாதிரி அநியாயமாக, மாண்புமிகு செழியன் சொன்னது போல், முதலிலேயே வட்டியையும் எடுத்துக் கொள்கிறுர்கள். இதைத் கட்டாயம் தடுக்க வேண்டும். அப்படியில்லை என்றால், வட்டிக் கடைகள் நடப்பதையே தடுக்க வேண்டும். இதற்கு ஆவன செய்ய சர்க்கார் முன்வருவார்களா?